# சுற்றுலாத் தலமாக மாறிய பொருநை!

**‘சத்தியம்’ தொலைக்காட்சியில் திருநெல்வேலியில் முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம் குறித்து வெளியிட்டுள்ள சிறப்பு ஒளிபரப்பு வருமாறு:**

திருநெல்வேலியில் அமைந்துள்ள பொருநை அருங்காட்சியகம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அண்டை மாநிலமான கேரளாவில் இருந்தும் சுற்றுலா பயணிகளை பெரிதும் ஈர்த்துள்ளது. ஆர்வத்துடன் பொதுமக்கள் கண்டு ரசித்து வருகின்றனர். நவீன தொழில் நுட்ப உதவியுடன் தமிழரின் வீரம், நாகரீகம் காட்சிப் படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து தங்களின் கருத்துகளை சுற்றுலாப் பயணிகள் பகிர்ந்து கொண்டனர்.

**நடுத்தர வயது பெண் -1 :-** நான் திருநெல்வேலியில் இருந்து வருகிறேன். இங்கே நம்முடைய ஐந்திணைகளைப் பற்றி மிகவும் பெருமையாக சொல்லி இருக்கிறார்கள். எல்லாமே ரொம்ப நல்லா இருக்கிறது. இப்போது உள்ள தலைமுறையினருக்கு இது பற்றி அந்த அளவிற்குத் தெரியுமா என்று தெரியவில்லை. அந்த அளவிற்கு 3டி, 5டி, சவுண்ட் எப்பெக்ட் எல்லாம் போட்டு அனைத்தையும் நல்ல விதமாக சிறார்களுக்கும் புரிகிற மாதிரி, நம்முடைய ஜெனரேசனுக்கும் புரிகிற மாதிரியும் சரி நல்லா சொல்லி இருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** இரும்புக் காலம், ஐந்தாயிரத்திற்கு முன்பே முதன் முதலாக தமிழர்கள் தான் இரும்பைக் கண்டு பிடித்துள்ளார்கள் என்பதைப் பற்றி?

**பெண்:** கண்டிப்பாக அந்தப் பெருமை தமிழர்களையே சாரும். அதுக்கு முன்பு நிறைய பேருக்கு தெரிந்து இருக்க வாய்ப்பு கிடையாது. அது மட்டுமல்ல ஐந்திணைகளும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொல்லும் போது அதுவும் ரொம்ப பெருமையான விஷயம். இன்னொன்று இரும்பு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் நாம் தான் கண்டுபிடித்து இருக்கிறோம். இரும்பு எப்படி தயாரிக்க வேண்டும் என்பது முதற்கொண்டு அந்த 3 டி, 5டி எப்பெக்டில் சொல்லும் போது இப்போது இருக்கின்ற ஜெனரேஷனுக்கும் இது பெருமை. நமக்கும் இது பெருமை.

**செய்தியாளர்:** இந்த ஏற்பாடுகள் எப்படி இருக்கு?

**பெண்:** ரொம்ப நல்ல முயற்சி, நல்ல ஏற்பாடு, இது மாதிரி இன்னும் பெருக வேண்டும் என்று நான் ஆசைபடுகிறேன்.

**முதிய பெண்:** படகை பார்த்ததும் தண்ணீரிலே நாங்கள் போன மாதிரி உணர்ந்தோம். சூப்பராக இருந்தது.

**செய்தியாளர்:** பொருநையை பார்த்தது எப்படி இருந்தது?

**முதிய பெண்:** பழங்காலத்தில் இருந்தவர்களின் பெருமையை அறிந்து கொள்ளும் வகையில் இது சூப்பராக இருந்தது. எல்லாம் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கண்டிப்பாக கூட்டிட்டு வந்து இதை பார்க்க வேண்டும். படகில் போவதற்காகவே அனைவரையும் கூப்பிட்டு வரவேண்டும். நல்லா இருந்தது. என்னுடைய பெயர் யசோதா.



**நடுத்தர வயது பெண்-2:-** இந்த கண்காட்சியினை எல்லோருமே வந்து பார்க்க வேண்டும். இப்போது இருக்கின்ற பள்ளி, கல்லூரி மாணவர்களாக இருக்கட்டும், குடும்பத்தினராக இருக்கட்டும் அவர்களுக்கும் நமது தமிழ்நாட்டின் பெருமை பற்றி தெரிந்து இருக்க வேண்டும். அனைவரும் வந்து பார்க்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.

ஏதேதோ சிலர் இன்றைக்கு பேசுகிறார்கள். ஆனால் நம்முடைய சரித்திர காலங்கள் எப்படி இருந்திருக்கிறது. குறிப்பாக கி.மு.க்கு முன்னாடி, 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டின் பாரம்பரியம், நாகரிகம் எப்படி இருந்தது என்பதை தெளிவா ஆதாரங்களோடு உண்மையிலேயே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ரொம்ப, ரொம்ப எக்சலைண்டாக இருக்கிறது. மனிதர்கள் உயிரோடு வாழ்வதற்கு எவ்வளவு விஷயங்கள் இருந்திருக்கிறது. நம்மை யாரெல்லாம் ஆட்சி செய்தார்கள் என்பதை எல்லாம் சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள். இதற்காக சிரத்தை எடுத்ததற்காக மனப்பூர்வமான பாராட்டுக்கள்,

“இதனை இன்றைக்கு இருக்கின்ற பிள்ளைகள் பள்ளிகளில் படிக்கின்ற இளம் பிள்ளைகள் இந்த அறிவியல் ஆராய்ச்சியை கூர்ந்து உற்று நோக்கி ஒரு நேரம் எடுத்து பொறுமையாக பார்க்கும் போது உண்மையிலேயே ரொம்ப பிரயோசனமாக இருக்கும். நாம் ஏன் வாழ்கிறோம், நம்முடைய வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்று இதனை பார்த்து கண்டு கொள்ள முடியும். இந்த ஏற்பாடு செய்ததற்காக ரொம்ப ரொம்ப என்னுடைய நன்றியை நான் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய பெயர் ஜான் சாமுவேல் நான் வயநாட்டில் இருந்து இந்த பொருநை காட்சியை பார்க்க வந்திருக்கிறேன்” என்றார்.




**கேரளப் பெண்**

கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆதிரா என்ற பெண், மலையாளத்திலே “பொருநை மிக சிறப்பாக அமைந்திருக்கிறது என்று பெருமை பொங்க குறிப்பிட்டார். எல்லாமே சிறப்பாக அமைத்திருக்கிறார்கள் நன் எனது தோழிகளுடன் வந்து பார்த்தேன், சிறப்பாக அமைத்திருக்கிறது. நான் இதைக் கண்டு களித்தேன். இங்கு அமைந்துள்ளது அனைத்தும் நன்றாக அமைந்திருக்கின்றது”.

**நடுத்தர வயது கேரள ஆண்:** இந்த இடத்திற்கு வந்து பார்த்ததில் மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால் நாம் வாழ்ந்த வாழ்க்கை சரித்திரத்தை கொஞ்சம் புரட்டி பார்க்கும் போது ரொம்ப எக்ஸலைண்டாக இருந்தது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் எவ்வளவு சிரமப்பட்டு இருக்கிறார்கள். இதனை எடுப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டு இருக்கிறார்கள். எவ்வளவு கடின உழைப்பை இன்றைக்கு எடுத்து இருக்கிறார்கள்.

இவ்வாறு சத்தியம் தொலைக்காட்சி சிறப்புச் செய்தியை ஒளிபரப்பியுள்ளது.

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமை!

## சுனாமி நினைவு தின அஞ்சலி!

# 4500 பொதுமக்களுக்கு நல உதவிகள் - உணவு - அமைதி ஊர்வலம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச.26-

கழக மாநில மீனவரணி சார்பில் சுனாமி ஆழி பேரலையில் சிக்கி உயிர் நீத்த மீனவ சொந்தங்களுக்கு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் அமைதி ஊர்வலம் மற்றும் 4500 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை

சென்னை மண்டல தேர்தல் பொறுப்பாளர், கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. தொடங்கி வைக்கிறார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநில மீனவர் அணி சார்பில் சுனாமி ஆழிப் பேரலையில் சிக்கி உயிர் நீத்த நம் மீனவ சொந்தங்களின் நினைவு போற்றும் வகையில் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் அமைதி ஊர்வலம் வெள்ளிக்கிழமை (26.12.2025) காலை 9.00 மணி அளவில் திருவொற்றியூர் கே.வி.கே குப்பம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்டு கடற்கரை வரை சென்று கடலில் அஞ்சலி செலுத்தும் அமைதி ஊர்வலத்தை சென்னை மண்டல தேர்தல் பொறுப்பாளர் கழக துணை பொது செயலாளர் ஆர்.ராசா துவக்கி வைத்து 70 நபர்களுக்கு மீன்பிடி இன்ஜின், 3000 பெண்களுக்கு அரிசி, 1000 பெண்களுக்கு மீன் விற்பனை செய்யும் பாத்திரம், 20 நபர்களுக்கு தையல் இயந்திரம், 20 நபர்களுக்கு சலவை பெட்டி, 1 மீனவருக்கு ஃபைபர் படகு, தள்ளு வண்டி, 4 மாணவர்களுக்கு மடிக்கணினி என 4500 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார், மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி பகுதி கழக செயலாளர்கள் தி.மு.தனியரசு, வை.ம.அருள்தாசன், ஏ.வி. ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

வி.ராமநாதன், இரா.முருகேசன், எம்.எஸ்.நாகலிங்கம், இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.


5வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி தெரிவிக்கிறார்.

இந்நிகழ்விற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு மாநில மீனவரணி சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

## 173 ‘அ’ வட்ட பொருளாளர் வழக்கறிஞர் மு.சத்தியமூர்த்தி - 170 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் மு.பலராமன்

# தந்தை கே. முனியாண்டி 13ஆம் நினைவு நாள் படத்திறப்பு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!



சென்னை, டிச.26

சென்னை வேளச்சேரி கிழக்குப் பகுதி 173 அ வட்ட பொருளாளர் வழக்கறிஞர் மு. சத்தியமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி 170 அ வட்டத் துணைச் செயலாளர் மு. பலராமன் ஆகியோரின் தந்தை கே. முனியாண்டி 13 ஆம் நினைவு நாள் மற்றும் படத் திறப்பு நிகழ்ச்சி நாளை (27.12.2025 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் 247, ரங்கநாதபுரம் திருவான்மியூரில் நடைபெறுகிறது.

173வது வட்டச் செயலாளர் வழக்கறிஞர் மு. தமிழரசு தலைமையில், வேளச்சேரி கிழக்குப் பகுதி செயலாளர் எம். விநாயகமூர்த்தி, 140வது மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மாவட்ட அமைப்பாளர் துரை கபிலன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் மா. சுப்பிரமணியன் அன்னாரின் படத்திற்கு அஞ்சலி செய்து திறந்து வைக்கிறார்.

இதில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ஹசன் மௌலானா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார், 13வது மண்டல குழு தலைவர் இரா.துரை ராஜ், 10வது மண்டல குழு தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி., வேளச்சேரி மேற்கு பகுதி பொறுப்பாளர் வே. ஆனந்தம், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பாலசுந்தரம், பகுதி துணை அமைப்பாளர் எம். ஆர்.பாபு, மற்றும் மாவட்ட, பகுதி,வட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

அனைவரையும் மு. சந்திரகுமார், மு. சிவசங்கர், மு. நாகேந்திரன், வழக்கறிஞர் மு. சத்தியமூர்த்தி, மு. பலராமன், பா. ராஜா ஆகியோர் வரவேற்கின்றனர்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை

# உறுதி அளிப்பு சட்டத்தை சிதைக்கும் ஒன்றிய அரசே திரும்பப் பெறு!

### எர்ணாவூர் எ. நாராயணன் அறிக்கை!



சென்னை, டிச. 26-

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் தற்போது அத்திட்டத்தில் இருந்து காந்தி பெயர் நீக்கப்பட்டுள்ளது திட்டத்திற்கு வி.பி. ஜி.ராம்ஜி திட்டம் என அதாவது வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார திட்டம் என்று பெயர் மாற்றம் செய்து மோடி அரசு அதனை பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றியுள்ளது.

உலக அளவில் அகிம்சைக்கு பெயர் போனது மகாத்மா காந்தியடிகள் பெயர் சுதந்திரப் போராட்டத்தில் பெரிதும் பங்கு வகித்து இந்தியா சுதந்திர நாடாக விளங்கியது என்றால் அது அகிம்சை காந்தியின் வழியில் தான் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் 2005 ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசினால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும் திட்டத்தின் பெயர் முதல் நடைமுறைகள் வரை மாற்ற பாஜக அரசு முடிவு எடுத்து அதை தற்போது அறிவித்துவிட்டது.

மகாத்மா காந்தி ஊரக வேலை திட்டம் என்றால் அனைவருக்கும் நன்கு தெரிந்து இன்னார் பெயரில் திட்டத்தின் பெயர் இருக்கிறது என்று தெரியும்.

இந்தியாவின் அடையாளமே மகாத்மா காந்தி தான் ஊரக வளர்ச்சி திட்டம் காந்தியின் பெயரால் கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வந்து இருக்கிறது காந்தி தேசப்பிதா மக்கள் தலைவர் தனக்காகவும் நமது நாட்டுக்காகவும் எதையும் எதிர் பார்க்காது நாட்டிற்காக உழைத்தவர் மத்திய அரசு உடனடியாக இந்த திட்டத்திற்கு பெயரை மாற்றம் செய்ததை திரும்ப பெற வேண்டும் என சமத்துவ மக்கள் கழகம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு எர்ணாவூர் நாராயணன் அறிக்கை விடுத்துள்ளார்.

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, டிச. 26-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு கேரளா பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று வடதமிழகம் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக் கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழ்நாட்டில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

## படப்பை ஆ.மனோகரன் தலைமையில்

# சாலமங்கலம் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம்!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. - கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் சிறப்புரை!

சென்னை, டிச.26-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் - சாலமங்கலம் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி... பரப்புரையை முன்னெடுக்கும் பாகம் எண். 330 உறுப்பினர் கூட்டம் இன்று 26.12.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நரியம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

ஒன்றிய கழகச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார். என்.வாசுதேவன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஒன்றிய பொதுக்குழு உறுப்பினர்கள் வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.இராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதாசுமன், டி. லோகநாதன், த.எழுமலை, என்.வாசு, சங்கீதா வேலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சிந்தல்பாடி ஊராட்சி, சி.அய்யம்பட்டியில் முன்னாள் மாநில தொண்டர் அணி இணைச் செயலாளர் முனைவர் சிந்தை மு.இராஜேந்திரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர், முனைவர் பி.பழனியப்பன் அன்னாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து ஏழை, எளியோர்க்கு அன்னதானம், வேட்டி, புடவைகள் வழங்கினார். இந்நிகழ்வில் டி.நெப்போலியன், முனைவர் சிந்தை மு.இராஜேந்திரன், இரா.பாரதி, இரா.அமுதினி, கோவிந்தன், வனஜாராணி, கோ.குபேந்திரன், சே.சதீஸ், கழக நிர்வாகிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கடத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் டி.நெப்போலியன், இரா.பாரதி, இரா.அமுதினி, கோவிந்தன், வனஜாராணி, கோ.குபேந்திரன், சே.சதீஸ், கழக நிர்வாகிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## ‘சட்டக்கதிர்’ ஆசிரியர் வி.ஆர்.எஸ்.சம்பத்துக்கு

# அமெரிக்க குடியரசுத் தலைவர் ‘சமூக சேவை விருது’!

### சென்னையில் பாராட்டு விழா!

சென்னை, டிச. 26 -

டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், வழக்கறிஞர், ஆசிரியர், சட்டக்கதிர், சட்ட மாத இதழ், தலைவர், சென்னை வளர்ச்சிக் கழகம், தலைவர், உலகத் தமிழர் பொருளாதார கழகம் என பல்வேறு நிறுவனங்க ளின் தலைவராகவும் செயலாளராகவும் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

இவரால் கடந்த 20 ஆண்டுகளாக பல்வேறு நாடுகளில் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. கடந்த அக்டோபர் மாதம், 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு அமெரிக்காவில் உள்ள வாஷிங்டனில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாநாட்டின் வெற்றியின் அடையாளமாக அமெரிக்கா குடியரசுத் தலைவர் சமூக சேவை விருது, டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதினை அமெரிக்கா இந்திய பெரு சிறு, குறு தொழில் நிறுவனங்களின் தலைவர் எலிஷா புலிவர்த்தி வழங்கினார்.

இந்த வண்ணமிகு சென்னை விழாவில் அமெரிக்க மேரிலேண்ட் மாநில முன்னாள் துணை செயலாளர் ராஜன் நடராஜன், டி.கே.எஸ். இளங்கோவன், (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), டாக்டர் பழனி ஜி. பெரியசாமி, (தலைவர், லீ மெரிடியன் ஓட்டல், தலைவர்), டாக்டர் வி.ஜி. சந்தோசம், ( தலைவர், விஜிபி குழு நிறுவனங்கள்), வள்ளலார், ஐ.ஏ.எஸ்., (ஆணையர், வெளிநாட்டு வாழ் தமிழர் நலத் துறை, தமிழ்நாடு அரசு) கே.சரவணக்குமார், (மலேசிய துணை தூதர், சென்னை), ஆர்.விடுதலை, (முன்னாள் அட்வகேட் ஜெனரல்), டாக்டர் முத்து தமிழ்செல்வன், (துணைவேந்தர், எஸ்ஆர்எம் பல்கலைக்கழகம்), கண்ணதாசன், (உறுப்பினர், மாநில மனித உரிமை ஆணையம்) ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களை 45 ஆண்டுகளாக பொதுப் பணி, சமூகப் பணி, சட்டப் பணி, கலைப் பணி, தமிழ் வளர்ச்சிப் பணி என பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார். 33 ஆண்டுகளாக சட்ட மாத இதழ் சட்டக்கதிர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

சட்டத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற பெரிதும் உழைத்து உள்ளார்.

இம்மாநாடுகளுக்கான பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளார். சட்டம், நீதி, மனித உரிமை, சச்சரவு தீர்வு, பல்வேறு மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்த உள்ளார். 45 ஆண்டு நாடுகளுக்கு மேல் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இவரது பல்வேறு பணிகளை பாராட்டி அமெரிக்கா குடியரசு தலைவரின் சமூக சேவை விருது வழங்கப்பட்டது.



‘சட்டக் கதிர்’ ஆசிரியர் வி.ஆர்.எஸ்.சம்பத்துக்கு அமெரிக்க குடியரசுத் தலைவர் ‘சமூக சேவை’ விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை அமெரிக்க – இந்திய பெரு, சிறு, குறு தொழில் நிறுவனங்களின் தலைவர் எலிஷா புலிவர்த்தி வழங்கினார்.